122

பதிவு எண் — M. 5720 உ வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

6 JAN 1956

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு.- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை-8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஐப்பசி, கஅ 4—11—55 தளிர்-2

122
1-56

திருவள்ளுவர் செய்தி - 1

## குருகுலத்தார்க்கு, அவர் வழி உலகத்தார்க்கு!

உயிர் நேயரீர்!

உயிர்களெல்லாம் பொதுவில் வினையின்வழியே பிறக்கின்றன. இருள் என்னும் அறியாமையே, நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் தோன்றுவதற்குக் காரணம்! இருவினைகளால் விருப்பு வெறுப்புகள் உண்டாகின்றன; மனக்கவலை மிகுகின்றது; மெய் வாய் முதலிய ஐம்பொறிகளின் வழியே நினைவுகள் பிரிந்து அறிவுச் செயலிலும் நிகழ்கின்றன. இதனால், மேலும் மேலும் வினைகள் பெருகி, உயிர்கள் பிறவி இறவித் துன்பங்களை அடைந்து வருகின்றன.

இவ்வுயிர்களில், மக்கட் பிறவி, அறிவறிந்துமுயன்று உயர்வு எய்துதற் குரிய பிறவி! நிலைமைகளை, நன்கு சிந்திக்கவும், வினைகளை எதிர்த்து வெல்லவும், இருளை ஒடுக்கவும், பிறவி தீர்ந்து அமைதியும் விடுதலையும் அடையவும் சிறிது முன்னேறி வந்துள்ளது. தன் கடமையை அது நன்றாகச் செய்து மேம்பட வேண்டும்.

வினையிலும் பிறவியிலும் உழலும் மற்றச் சிற்றுயிர்கள், இன்னும் இச் சிந்தனை முன்னேற்றங்கூட இல்லாதிருத்தலையும் மக்கட் பிறப்பினர் எண்ணி இரங்கி, அவற்றிற்கும் இயன்ற உதவிகள் செய்து கைதூக்கி விடவேண்டும். உயிர்நேயம் இப்படிப் பயன் மிகுக்க வெண்டும்.

மக்கள், தாமே இப் பெருங்கடமைகளை நிறைவேற்ற இயலாது; இயலுமாயின், இயல்பாகவே இருளில் அவர் உயிர் அழுந்தியிராது.

ஆதலால், தம்மினும் மேம்பட்ட, தம்மைப்போல் இருளில் இயல்பாகவே அழுந்தியிராத, இருவினைத் தாக்குதல் சேராத, விருப்பு வெறுப்புகள் மனக்கவலைகள் புலன் தொடர்புகள் அறிவு நிலைமைகள் ஊனப் பிறவியிறவிகள் இல்லாத தூய அறிவும் அன்பும் அருளும் அறமும் எனைப் பெருங்குண பெருவல்லமைகளும் உடைய ஒரு பெரியோன் துணை தேவை. அந்தத் துணை இயல்பாகவே உள்ளது.

எல்லாவற்றோடுங் கலந்து உதவிபுரியும் எளிமைப்பாடும் இங்ஙனம் கலத்தலால் தன் இயல்புக்கு இழுக்கு நேராத அருமைப்பாடும் உடையது அது! எழுத்துகளோடு எழுத்தாய் இருந்துகொண்டே அவ்வெழுத்துகளுக்கெல்லாம் 'அகரம்' தலைமையாய் இருந்து உதவுதலை நாம் அறிவோம்; அதைப்போலவே உலகுக்கு ஒரு முதற் பொருளாய் எளிமையும் அருமையும் உடையதாய்த் தலைமைப்பாட்டுடன் அந்தத் துணை உதவி வருகிறது. அது தொன்றுதொட்டே உதவியாயிருத்தலை முதலில் மக்கள் உணரவேண்டும். அதன்பின், பெருந்துணையாகிய அதனைத் தெளிய அறிந்து, மதித்து அன்பு செய்து பாராட்டி அதன் வழி நின்று இங்ஙனமெல்லாம் ஈடுபட்டால், மேலு மேலும் அதன் உதவி கிடைத்து வரும்; உலகப் பொருள்களும் இன்பங்களும் அந்நிலையில் நம்மோடு ஒத்து ஒழுகி அப் பெருந்துணையின் அணைப்புக்கு இணக்கமாயிருக்கும்.

வாழ்க்கையை இங்ஙனம் எளிமையும் இனிமையும் ஆக்கிக் கொள்ள மக்கள் அம் முதல்வனுடன் நெருக்கங் கொண்டு அவன் இறைமைக் குணங்களில் நாளும் பழகி வருதல் இன்றியமையாதது.

'ஆ'

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

| கிளை | மன்மத, ஐப்பசி, | தளிர் |
|---|---|---|
| 8 | 4-11-55 வெள்ளி. | 2 |

## இலக்கியத்தில் சிற்றுயிர்கள்

"தமிழ் நாட்டின் தலைநகராக விளங்கும் சென்னை மாநகரத்தில் சிறந்த நூற்றாண்டு விழா ஒன்று நடைபெறுகின்றது.

எத்தனையோ நூற்றாண்டு விழாக்களைக் கண்டிருக்கின்றது சென்னை மாநகரம். ஆயினும், இவ் விழாவிலே ஒரு தனிச் சிறப்பு உண்டு.

சென்ற ஒரு நூறாண்டாகக் காட்டு வாசிகளாகிய நண்பர் பலர் சென்னை நகரத்தின் நடுவேயுள்ள பூங்கா வனத்தில் காட்சி தருகின்றார்கள். கூட்டில் அடைபட்டிருந்தாலும் குறைவின்றி வாழ்கின்றார்கள். பிள்ளை குட்டிகள் பெற்றுப் பெருகுகின்றார்கள்.

இவ்வாறு பல்லாண்டுகளாக நம்மிடையே வாழ்ந்து வரும் காட்டு நண்பர்களைக் கனிவுடன் வாழ்த்திப் பல்லாண்டு கூறுதலே இந் நூற்றாண்டு விழாவின் நோக்கமாகும்.

இக் காட்சிச் சாலையில் உள்ள விலங்குகளும் பறவைகளும் நூறாண்டுகளாகத் தம்மை ஆதரித்து வளர்த்த நகர சபையார்க்கும், அவர்கள் மூலமாக நகரப் பொதுமக்களுக்கும் இன்று நன்றி செலுத்துகின்றன.

ஏற்றமும் தோற்றமும் வாய்ந்த யானை கையெடுத்து வணங்குகின்றது.

விலங்கின வேந்தனாகிய சிங்கம் வெம்மை ஒழித்துச் செம்மையாக நோக்குகின்றது.

புள்ளி மான் துள்ளி மகிழ்கின்றது.

அழகிய மயில் தோகையை விரித்து ஆடுகின்றது.

புள்ளினம் பாடுகின்றது.

இந்தச் சூழ்நிலையைப் பார்க்கும் பொழுது "காக்கை குருவி எங்கள் சாதி" என்று பாரதியார் பாடிய பாட்டின் உண்மை நன்கு விளங்குகின்றது.

*(சென்னைச் சிற்றுயிர்க் காட்சி சாலை நூற்றாண்டு விழாவில் திரு. சேதுப் பிள்ளை யவர்கள் உரை.)*

'சு'

## தல யாத்திரை

நம் ஆசிரியரவர்கள் கொங்கு சேர நாட்டுத் திருத்தல யாத்திரையை, இவ்வாண்டு 1955 நவம்பர் மாத நடுவில் மேற்கொள்வதாக இருக்கிறார்கள்.

பாடல் பெற்ற திருத்தலங்கள் கொங்கு நாட்டில் 7-ம், சேர நாட்டில் 1-ம் உள்ளன. ஆக 8 தலங்களும், அங்குள்ள பேரூரும், சோழ நாட்டுத் தலங்கள் சிலவும் காணலாம். மங்களூர் அருகில் கானங்காட்டிலுள்ள இராமதாஸ் அடிகள் ஆநந்தாசிரமத்தையும், அவர்கள் மாணவியார் அன்னை கிருஷ்ணபாய் அவர்களின் சந்நியாச ஏற்பு 25-வது ஆண்டு விழா 29-11-1955ந் தேதி நடைபெறுவதால் அதனையும் கண்டு வரலாம்.

மேற்படி யாத்திரையிற் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள், 20-11-1955ந் தேதிக்குள் சேர்க்கைக் கட்டணம் ரூ1-ம் பொதுச் செலவுக் கட்டணம் ரூ7-ம் செலுத்தித் தம் பெயர்களைப் பதிவு செய்து கொள்வார்களாக! இவை, ஏற்பாடு வழிபாடு காணிக்கை முதலிய குருகுலச் செலவுகட்கு உரியவை.

இந்தத் திருப்பயணம் 12 நாட்களில் முடியும். போக வர வண்டிச் செலவு உணவுச் செலவு முதலியன அவரவர் பொறுப்பைச் சேர்ந்தவை.

—குருகுலச் செய்தியாளர்.

## முல்லைக் கொடி

கலைமகள் விழாவிலிருந்து வரும் முல்லைக் கொடியின் 8-ம் கிளையின் புதிய தளிர்கள், புதிய முறையில் புதிய அச்சு எழுத்துக்களுடன் வெளிவருகின்றன.

இதுவரையில், இப் புதிய ஆண்டுக்குக் கையொப்பம் செலுத்தாத அன்பர்கள், கூடிய விரைவில் செலுத்தி இதழ்களைப் பெற்றுக் கொள்வார்களாக!

குருகுலத்தார் அஞ்சற் கட்டணம் ரூபா ஒன்று மட்டும் செலுத்தி முல்லைக் கொடியை இனி அஞ்சலிலேயே பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறோம்.

—செய்தியாளர்.

ஒருவன் அறனுஞ் செய்யாமற் பாவமுஞ் செய் வானென்றால், அவன் வாழ்க்கை மிகவுங் கொடிய தொன்று என்றே கூறவேண்டும்; அதனினுங் கொடியது பிறன்மனை நயத்தல் என்று இங்கே ஆசிரியர் எச்சரிக்கின்றார்; அதோடு, அறனுஞ் செய்யாது பாவ முஞ் செய்யுங் கொடிய வாழ்க்கையிலிருந்து உய்யப், பிறன்மனை நயவாமை என்னும் நலம், வழிசெய்யும் என்றும் நினைவூட்டுகின்றார்.

ஒருவன் பிறன்மனை நயவாத பேரறம் உடையவனுயிருந்தால், பிறர் பலரும் பெரும்பகை முதலிய இன்றி நேரத்திற் காக்குங் கருத்துடையராதலுங் கூடுமாதலின் ‘நன்று’ என்றார். பிறன்மனை நயத்தல், உலகியலும் அறமும் மீறிய ஆண்மையற்ற தீய நடத்தை; எல்லாத் துன்பங்களுக்கும் நிலைக்களன். நயவாமையோ, அந்நிலைகளை யெல்லாம் மாற்றும் மருந்து; மேலும், காமமடங்கிய நிலையில், உரிய துணைவியின்பாற் காதல் சிறந்து ஒழுக இடஞ் செய்தலின், ஏனைக் கள் களவு பொய் கொலை என்னும் அல்லவற்றை மெல்ல மெல்லக் குறைத்து அறனும் செய்ய வைத்து, அவனை உய்விக்கும் என்பது.

**அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்**
**பெண்மை நயவாமை நன்று.**

உரை:

*அறன் வரையான் அல்ல செயினும்* – புண்ணியம் தேடாது பாவமே செய்வானுயினும், *பிறன்வரையாள்*



எப்படி முடியும்? அறனியலோடு இல்வாழ்க்கை நடத்துவது எப்படி? அறவோன் ஆவது எப்படி? அந்தணன் ஆவது எப்படி? துறவோன் ஆவது எப்படி? தூயோன் ஆவதுதான் எப்படி? எப்போது?

பெண்மை என்னும் இன்ப வல்லமை, தனக்கே உரிய தக்க ஓர் ஆண்மையுடன் இயைந்து இணங்கி அதனை அணி செய்ய வல்லது! அதனைப் பிரித்தலென்பது இயலாது; பிரிக்க முயல்வது உண்மையிற் சிதைத்தலாகவே முடியும். உயர்ந்த மென்மை அழகியல்பாகிய பெண்மைக்குப் பிறன் மனை விரும்பும் பேடியுடன் ஆண்மையிழக்கும் அலியுடன் இயையும் இயற்கை ஏது? மலரை அதனிடத்தில் அதனியல்பில் விளங்கக் காணும் உயர்நோக்கில்லாதவன், அதனைக் கசக்கி எறியுங் கயவனே யல்லது வாழ்வோனு அவன்! அவன், அறனியலான் இல்வாழ்வானுதல் ஒருகாலும் இல்லை.

**அறனியலான் இல்வாழ்வான் என்பான்**
**பிறனியலாள்**
**பெண்மை நயவா தவன்.**

உரை:

*அறன் இயலான்* – அறத்தின் இயல்போடு, *இல்வாழ்வான் என்பான்* – இல்லறஞ் செய்வோன் எனப்படுபவன், *பிறன் இயலாள் பெண்மை*–பிறனொருவற்கு உரியவளாய் அவன் இயல்புகளில் அமைந்து நிற்பவளது பெண் தன்மையை, *நயவாதவன்* – விரும்பாதவன்.

**குறிப்பு:**

பிறன் மனைவியின் பெண்மைக்கு அவாவாதவனே, முறையோடு இல்லறம் நடத்துகின்றவன் என்று பாராட்டப்படுவான் என்பது.

இயலான் – இயலோடு; ஆன் உருபு உடனிகழ்ச்சி. வாழ்க்கைத் துணைவியுடன் இல்வாழ்வதனுலேயே, அது, இல்லறம் ஆகிவிடாது; அறப் பண்பு பொருந்தியிருக்கவேண்டும்; அப்பண்பு உள்ளதென்பதற்கு அடையாளம் பிறன்மனை நயவாமையே என்றபடி.

பிறன் மனைவியைப் பிறன் இயலாள் என்றதும், பிறன் மனை நயவாமையைப் பிறன் மனைவியின் பெண்மை நயவாமை என்றதும், மிக்க பொருளாழமும் பொருட் செறிவும் பொருளினிமையும் அமைந்தவை.

நயவாதவனே எனப் பிரிநிலை யேகாரம் கொள்ளலும் ஒன்று

## அறனும் ஒழுக்கமும்

**விளக்கம்:**

அறம் என்பது ஒழுங்கு முறை; அதனை நடைமுறையில் தொடர்பாகக் கொண்டுவருவது ஒழுக்கம்.

செய்யப் போகும்போது சிலர் ஒழுங்காகச் செய்வர்; ஆனுல் அதனைத் தொடர்பாகச் செய்யும் வலிமையற்றவராய் இருப்பர். பிறன்மனை நோக்காத சான்



யுடையவர் என்பது பெறப்பட்டது; இது தோன்ற 'நாம நீர் வைப்பு' என்று உலகை விதந்து கூறினுர்.

## பெரிய தீமை

**விளக்கம்:**

கொலை, பொய், களவு, கள், காமம் என்னும் ஐந்தும் 'ஐம்பெரும் பாவம்' என்று பெரியோர் சொல்லுவது வழக்கம்; இவற்றுள், காமம் என்பது தொடக்கம்; அதற்குக் கள் துணைபுரியும்; கள்ளுண்டு களித்தவர்க்குக் காமம் ஒரு வரைதுறையின்றி மீறும்; இரண்டையும் காற்றெடு நெருப்பு எனலாம்; இவற்றின் வயப்பட்டவர்க்குக் களவு, பொய், கொலை என்பன எளிதில் நிகழ இடமுண்டு. இவை பலவும் ஒன்றுக்கொன்று பெரிய பாவங்கள். இப்படிக் காமம் கொலைவரையிற், சென்று பொருந்துதல் உண்டு. இவையெல்லாம் அல்ல செய்தல்.

இனி, அறம் செய்தல் என்பது, மேற்கூறிய ஐம்பெரும் பாவங்களின் மறுதலையாய நன்மைகளைச் செய்தல். அவை முறையே, உயிர்வாழக் காத்தல், வஞ்சியாது நலம் புரிதல், விளம்பரமின்றி உதவுதல், வலிவுந் தெளிவும் உண்டாக உண்ணவும் பருகவும் வழங்குதல், அன்பு செய்தல் என்பன. நலங்கள் பலவும் இவ் வகைகளில் அடங்கும்.

அறஞ் செய்தலாற் புண்ணியமும் அல்லவை செய்தலாற் பாவமும் பிறவிதோறும் தொடரும்.

பெருத உள்ளம், ஒரு பக்குவமான நல் உள்ளம் ஆகின்றது; ஒரு பண்பமைந்த நிலைக்களமாய்த் திகழ்தலும், அத் தகையோனை நலங்கள் பலவும் தாமே வந்து பொருந்தும் இயைபைப் பெறுகின்றன; பிறர்க்குரியாள் தோள் தோயாதார் நலக்குரியராகின்றனர்.

**நலக்குரியார் யார்எனின், நாமநீர் வைப்பிற்**
**பிறர்க்குரியாள் தோள்தோயா தார்.**

**உரை:**

**நாம நீர் வைப்பில் நலக்கு உரியார் யார் எனின் – அச்சந் தரூங் கடல் நீராற் சூழப்பட்ட உலகத்தில் நன்மைக்குரிய நல்லவர் யார் என்ருல், பிறற்கு உரியாள் தோள் தோயாதார் – பிறனுக்கு உரியவளுடைய தோள்களைச் சேராதவரே.**

குறிப்பு:

தோயாதாரே என்று பிரிநிலை யேகாரம் விரித்துக்கொள்க.

நலத்துக்கு என்பது ‘நலக்கு’ என நின்றது, நிலத்துக்கு என்பது ‘நிலக்குப்’ என நின்ருற்போல; ‘நிலக்குப் பொறை’ (101: 3.) என்னுந் திருக்குறள் நோக்குக. நலங்கள் தாமே வந்து பொருந்துதற்குரிய தகுதியுடையவர் என்றற்கு ‘நலக்குரியார்’ என்ருர். பிறனில் விழையாதாரே உலகு முழுவதிலும் நலங்கள் எய்துதற்குரியார் என்றதனுல், உலகத்தில் வேறு வேறு காரணங்களால் நலங்கள் எய்துவார் எல்லாரையும்விட இவரே தலை சிறந்த தகுதி



ருேர்க்கு இவ்விரண்டு திறனும் இயல்பாகவே எளிதாய் அமைந்து வரும் என்றபடி. அறனும் ஒழுக்கமும் பெற அரிய முயற்சிகள் வேண்டும்; அரிது முயன்றும் பிறரெல்லாம் தோல்வி யுறுவாராக இவர்க்கு மட்டும் இவை எளிதின் அமையுமென்ருல், அதற்குக் காரணமாய் இருக்கும் பிறன்மனை நோக்காத பேராண்மை, உண்மையிற் பேராண்மை தானே!

பிறன்மனை நோக்காத பேராண்மை, சான்ருேர்க்கு ஒழுங்கு பயப்பது மட்டுமன்று, தொடர்ந்த ஒழுக்கமும் பயப்பது, அதிலும் நிறைவாகப் பயப்பது என்று ஆசிரியர் கூறுவதை நோக்கினுல், இதனினும் மிக்க வாழ்க்கை யொழுங்கு என்பதும் நல்லொழுக்கம் என்பதும் வேறு இல்லை என்பது உணரப்படும், தெளியப்படும்.

விருந்தோம்பல் முதலிய ஏனை ஒழுக்கங்கள் கூட, ஒவ்வொன்றும் நிறைவாக அமைவதற்கு, இப் பேரறம் இடஞ் செய்யும்; ஒவ்வொன்றிலும் ஒழுங்கு காத்தல் மட்டுமன்று, அவ்வொழுங்கை நிறைவுக்குக் குறைவின்றித் தொடர்ந்து காத்தலும், அங்ஙனங் காத்தல் இயற்கை நடைமுறையாய்விடுதலுங் கூடும்.

மறுமைக்குத் தொடரும் அறன்மட்டு மன்றி இம்மைக்குப் பயன் செய்யும் ஒழுக்கமும் ஆகும் என்ற குறிப்பினுல், இருமை நலனும் இதனுற் பெற இடம் இருக்கின்றது. இம்மை நலத்துக் குரிய வீரத்தினும் பார்க்க இருமை நலங்கட்கும் உரிய வீரம்

பெருவீரமாதலின், இவ் வொழுக்க வீரத்தைப் 'பேராண்மை' என்று வாய்மணக்க வழங்கினர்.

**பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு**
**அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு.**

உரை:

**பிறன்மனை நோக்காத பேராண்மை – பிறன் மனைவியை நாடாத உயர்ந்த ஆண் தன்மை, சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு – மேன்மக்களுக்கு அறன்மட்டுந்தானா, நிறைவடைந்த ஒழுக்கமுமாகும்.**

குறிப்பு:

நோக்கல் – அவாவாற் கருத்திருத்துதல். புறப் பகையை அடக்கும் வீரத்தைவிட அகப் பகையாகிய மீறிய காமத்தை அடக்குதற்கு மிக்க வீரம் வேண்டுமாதலின், அத்தகையதைப் 'பேராண்மை' என்றார். ஆண்மையிற் பெருமை மேவியது ஈண்டுப் பேராண்மை எனப்பட்டது. அதனை உடையோர் நிறைந்தோராதலின், 'சான்றோர்' எனப்பட்டனர். அவர்க்கு அறமும் ஒழுக்கமும் இயல்பாய் அமையும் என்றபடி. ஒன்றோ என்பது எண்ணின் பொருட்டு.

## நலங்களுக்கு உரியவர்

**விளக்கம்:**

இயற்கையில் இணக்கத்திற்கு ஓர் இயைபு உள்ளது; எப்போதும் ஒன்றையொன்று நாடியபடியாய், ஈர்ப்புண்டு இயைவதாய், இருக்கின்றது.



நன்மை, தான் எங்கே சேரலாம் என்று தனக்குரிய இடத்தை, இயைபை, காலத்தை, நாடியபடியே இருக்கிறது. அப்படியே தீமையும்; அப்படியே இவ்விரு வகையிலும் அடங்கிய ஏனைப் பண்புகளும்.

ஆண்மையைப் பெண்மையும் பெண்மையை ஆண்மையும் அவாவிய படியாய் ஈர்ப்புண்டிருத்தலும் இங்கே நினைவுகூரலாம்.

வறியர் செல்வரை நாடுதல் இயல்பு; அறிவிலார் அறிஞரைத் தம் தேவைகட்கு விரும்புகின்றனர். வெள்ளம் பள்ளம் நாடுதலும் எறும்பு திட்டை ஏறுதலும் இயல்புதானே.

பயிர், மழையை நாடியபடி உள்ளது; கன்று பசுவைத் தேடியபடி உள்ளது; தாமரை கதிரொளியையும், அவ்வாறே சூரியகாந்த மலர் சூரியனையும் கவ்வியபடி உள்ளன. அரசன் குடிமக்களையும், குடிமக்கள் அரசனையும் தாவியபடியும் தழுவியபடியும் உள்ளனர்.

இயற்கை வாழ்வு, இங்ஙனம் ஈர்ப்புண்ட வாழ்வாய், தாவி அமையும் வாழ்வாய்த், தடையற்ற இடமெல்லாம் இணங்கற்குரிய இடமெல்லாம் இணைந்தமைந்த வாழ்வாய்த் திகழ்கின்றது.

இயற்கை வழியே எளிய வழி, இனிய வழி, உயிர்ப்பு மிக்க நடைமுறை!

பிறன்மனை விழையாதான் உள்ளம், காமத்தால் மீறுத உள்ளம்; அதனால் வெகுளி மயக்கங்களும் மிகாத உள்ளம்; இம் முக்குற்றமும் ஓங்கி இடம்

# தலயாத்திரை நிகழ்ச்சிக் குறிப்பு

| | |
|---|---|
| 26–11–55 (சனி) | சென்னை சென்ட்ரலிலிருந்து கொச்சின் எக்ஸ்பிரெஸ்ஸில் புறப்பாடு மாலை 5 - 55 |
| 27–11–55 (ஞாயிறு) | இருஞ்சாலக்கடை வழி (சேர்) 9 - 41 திருஅஞ்சைக்களம் வழிபட்டு மீண்டு மாலை 6 - 21 இரயிலில் சோரனூர் வழி (சே) 9. (புற) 0 - 46 கன்னங்காடு |
| 28–11–55 (திங்கள்) | ஆநந்தாசிரமம் சேர்தல். (கன்னங்காடு ஸ்டேஷன் காலை 7 - 49 சேர்தல்) |
| 29–11–55 (செவ்வாய்) | ஆநந்தாசிரமம் – விழா. |
| 30–11–55 (புதன்) | கன்னங்காடு காலை (புற) 9 - 6; கோயம்புத்தூர் (சேர்) இரவு 9 - 6 (தங்கல்) |
| 1–12–55 (வியாழன்) | பேரூர் வழிபாடு (தங்கல்) |
| 2–12–55 (வெள்ளி) | கோயம்புத்தூரிலிருந்து காலை 8-10 வண்டி: திருப்பூர்(சேர்) காலை 9 - 32<br>திருப்பூரிலிருந்து பஸ் வழி திருமுருகன் பூண்டி, அவிநாசி (திருப்புக் கொளியூர்) வழிபாடு; மாலை (புற) 8-3 திருப்பூர் ஸ்டேஷன்; ஈரோடு (சே) இரவு 9-7 (தங்கல்) |
| 3–12–55 (சனி) | ஈரோட்டிலிருந்து பஸ் வழி திருச்செங்கோடு சென்று மீளல். பிற்பகல் பவானி (திருநணா) சென்று மீளல்; இரவு ஈரோட்டில் (தங்கல்) |
| 4–12–55 (ஞாயிறு) | ஈரோட்டிலிருந்து (புற) காலை 5 - 35; கொடுமுடி (சேர்) 6 - 34 வழிபாடு (புற) 12 - 29; கரூர் (சேர்) 1 - 22<br>வெஞ்சமாக்கூடல் சென்று மீண்டு இரவு கரூரில் வழிபாடு (தங்கல்) |
| 5–12–55 (திங்கள்) | கரூரிலிருந்து (புற) 5 - 43; குளித்தலை (சேர்) 6 - 36<br>கடம்பந்துறை, திருவாட்போக்கி, திருஈங்கோய்மலை } பஸ்வழி; வழிபட்டுக் குளித்தலை மீளல் (கார்த்திகை சோமவாரம் வழிபாடு சிறப்பு<br>இரவு குளித்தலையிலிருந்து திருப்பராய்த்துறை சேர்தல் இரவு 9 - 10 (தங்கல்) |
| 6–12–55 (செவ்வாய்) | திருப்பராய்த்துறை வழிபாடு; (புற) 3 - 40<br>திருச்சி–கோட்டை (சேர்) 4-39; மலைக்கோயில்; வழிபாடு(தங்) |
| 7–12–55 (புதன்) | திருவானைக் காவல் காலை வழிபாடு; மாலை ஸ்ரீரங்கம் |
| 8–12–55 (வியாழன்) | ஸ்ரீரங்கம் காலை (புற) 4-46; வாலரடி ஸ்டேஷன் 5-5 காலை; திருப்பாற்றுறை, திருமாந்துறை, அன்பிலாலந்துறை வழிபட்டு மீண்டு லால்குடியில் இரவு (தங்கல்) |
| 9–12–55 (வெள்ளி) | லால்குடி (புற) காலை 5-25; கள்ளகம் (சேர்) 6-9; பழுவூர் வழிபட்டுச் சென்னைக்கு அரியலூர் வழி (பு) மாலை 3-37. |

## அருட்பெருஞ் சோதி அகவல் பேருரை

**அகவல் மாட்சி:**

வள்ளலார் திருவருட்பாவில், தலைமணி போல விளங்குவது அருட்பெருஞ்சோதி அகவல். அது "ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி"யின் அருமை பெருமைகளையும், எளிமை இனிமைகளையும் விஞ்ஞான வழியிலும் மெய்ஞ்ஞான நிலையிலும் பலபடியாக விரித்து விரித்து விளக்குகின்றது.

வேதத்துள் ஸ்ரீ ருத்திரம் போல அருட்பாவில் அருட்பெருஞ்சோதி அகவல் விளங்குகின்றது.

**பேருரை முயற்சி:**

அருட்பெருஞ் சோதி அகவலை முறையாகப் பலர் குரு வாரந்தோறும் திருவடிப் புகழ்ச்சியுடன் பாராயணமாக ஓதிவருகிறார்கள்; அதுமேலு மேலும் சிறக்கும் பொருட்டு அகவலுக்கு விளக்கவுரை வெளியிடும் முயற்சியும் திருவருளால் இப்போது மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) மேற்கொள்ளப்பெற்றிருக்கிறது!

ஆசிரியர் இளவழகனார் அவர்கள் சென்னையில் செய்து வரும் அருட்பெருஞ் சோதி அகவல் விரிவுரைகளில் அரிய கருத்துக்கள் வருகின்றன. திருக்குறளுக்குப் பரிமேலழகர் விளக்கமும், சிவஞானபோதத்துக்கு மாதவச் சிவஞான யோகிகள் விளக்கமும் போல அருட்பெருஞ் சோதி அகவலுக்கு ஆசிரியர் இளவழகனார் தரும் விளக்கங்கள் இருக்கின்றன.

**வெளியீட்டு வகை:**

அகவல் விளக்கங்கள் பகுதி பகுதியாக மாதம் ஒன்றுக்குக் கிரவுன் 32-பக்கங்கள் அளவில் வெளிவருகின்றது. ஓர் ஆண்டுக்கு இப்படி 12 பகுதிகள் கிடைக்கும்.

முதல் பகுதி, வள்ளலார் பிறந்த நாள் புரட்டாசி 30 (16–10–55)-ல் வடலூரில் வெளியிடப்பெற்றது.

ஆர்வமுடையோர் தம் பெயரை, உரிய முகவரியுடன், சேர்க்கைக் கட்டணம் ரூபா 2; ஆண்டுக் கையொப்பம் ரூபா 3; ஆக ரூபா 5–(ரூபா ஐந்து மட்டும்) செலுத்தி, குருகுலத்திற் பதிவு செய்துகொள்வார்களாக! இவ்வாறு பெயர்ப் பதிவு செய்துகொள்ளாதவர்க்கு இவை கிடைக்க மாட்டா. ஒரு பகுதி பெறுவோர் எல்லாப் பகுதிகளும் பெறுதற்குரியர்; ஆதலின் சேர்க்கைக் கட்டணம் உண்டு; அது, கடைசியில் அஞ்சற் செலவுக்குக் கணக்கீடு செய்யப் படும்.

**பெயர்ப் பதிவுக்கு:**

சென்னையில்:
திரு. ஆறுமுகம் அவர்கள்,
31. முல்லா சாயபு தெரு,

மாம்பாக்கத்தில்:
குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் (அஞ்.)

—குருகுலத்தார்.

## சென்னையில் ஆசிரியர் விரிவுரைகள்

1. சனிக்கிழமைதோறும்:

ஆறெழுத்து மந்திர விளக்கம்: திருவல்லிக்கேணி அன்னதான சமாசத்தில் (73, பிள்ளையார் கோயில் தெரு, திருவேட்டீஸ்வரன் பேட்டை) மாலை 6-30 முதல் 8-மணி வரை

2. ஞாயிறுதோறும்:

சித்தாந்த வகுப்பு:-திருக்களிற்றுப்படியார்: சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபம்; பிற்பகல் 4 – 5-30 மணி

பெரிய புராணம்:- திருநாவுக்கரசு நாயனார்: பூக்கடை சென்னை மல்லீசர் திருக்கோயில் மாலை 6 முதல் 8-மணி வரை.

3. திங்கட் கிழமைதோறும்:

சிவஞான சித்தியார் சொற்பொழிவு: தங்கசாலைத் தெரு, தொண்டை மண்டலம் பாடசாலையில்; மாலை 6–30—8.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு, சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)